**தமிழ் நாடு அரசு** **பொதுப்பணித்துறை**

# கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டம், சேலம்–636007.

**ஒப்பந்தமுறை : ஒட்டு மொத்தம் / சதவிகித முறை**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண். 10 / 2022–2023 / நாள்: 09.05.2022**

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், சேலம் கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்ட, செயற்பொறியாளர் அவர்களால் கீழ்க்காணும் பணிகளுக்கு பொதுப்பணித்துறையில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் **27.05.2022** பிற்பகல் 3.00 மணி வரை நேரடியாக பெற்றுக் கொள்ளப்படும். மேற்குறிப்பிட்ட தேதிக்குள் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள், அதே தேதியில் பிற்பகல் 3.30 மணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ள ஒப்பந்தக்காரர்கள் (அல்லது) அவர்தம் அத்தாட்சி பெற்ற முகவர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

*****

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூபாய் இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை (ரூபாய்) | ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் கிடைக்க பெறும் காலம் | ஒப்பந்த காலம் (மாதம்) |
|---|---|---|---|---|---|
| 1. | சேலம் மாவட்டம், சேலம் மாநகராட்சி கோட்டம் எண். 30 செவ்வாய்பேட்டை நகரவை உயர் நிலைப் பள்ளிக்கு இரண்டு வகுப்பறை கட்டடம் கட்டுதல் | 36.00 | 28,000/– | 12.05.2022 முதல் 26.05.2022 பிற்பகல் 5.45 மணிவரை | 4 |
| 2. | சேலம் மாவட்டம், சேலம் மாநகராட்சி கோட்டம் எண் 36 சத்யாநகரில் தார்சாலை அமைத்தல் | 49.30 | 34,700/– | | 4 |

| | |
|---|---|
| ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள ஒப்பந்தக்காரர்கள் தகுதி | வ.எண் :1 முதல் 2 வரை – வகுப்பு II மற்றும் அதற்கு மேலும், பொதுப்பணித்துறையில் பதிவு பெற்ற / பதிவை புதுப்பித்த ஒப்பந்தக்காரர்கள், |
| முன் வைப்புத் தொகை செலுத்த வேண்டிய அலுவலர் விவரம் | செயற்பொறியாளர், பொ.ப.து., கட்டட (க&ப) கோட்டம், சேலம்–7 |
| ஒப்பந்த புள்ளி படிவ விலை மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி (ரூபாய்) | படிவ விலை ரூ. 9,000/– சரக்கு மற்றும் சேவை வரி ரூ. 1,080/– |

- ❖ ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை கீழ்க்கண்ட இணையதளத்தில் இலவசமாக தருவித்துக்கொள்ளலாம் **www.tenders.tn.gov.in. & www.tn.tenders.gov.in** அல்லது செயற்பொறியாளர் பொ.ப.து., கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்ட அலுவலகம். சேலம்–7அலுவலகத்தில் மேற்காணும் ஒப்பந்தப்புள்ளி படிவ விலை உரிய வடிவில் செலுத்தியும் நேரில் பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளில் மாற்றம் ஏற்படின் அது பற்றிய விவரம் மேற்காணும் வளைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்படும்.
- ❖ ஒப்பந்தப்புள்ளி படிவ விலை கணக்கு தலைப்பு : 0059 – Public Works – 80 General– 800 – Other Receipts AC–Miscellaneous 233 – Professional and Special Services 09 Public Works – Buildings (D.P. Code 0059 – 80 – 800 – AC–23309) & Through Online Challan (D.P. Code 0059 – 80 – 800 – AC–22705).
- ❖ சரக்கு மற்றும் சேவை வரி கணக்கு தலைப்பு : 0006–00–State Goods and Service Tax(SGST)–101 Tax–AA–State Goods and Service Tax (D.P.Code 0006–00–101– AA–0000) & EE B(C&M) D/ Salem GSTIN ID:33AAAGE0579F1ZR.
- ❖ படிவ விலை செயற்பொறியாளர் கட்டட (க&ப) கோட்டம், சேலம், அவர்களின் D.O.Code No.PM.201 எனும் கணக்கில், சேலம் மாவட்டதை சார்ந்த கருவூலம் மற்றும் சார் கருவூலங்களில் செலுத்தப்பட வேண்டும்.
- ❖ **ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் தபாலில் அனுப்பிவைக்கப்படமாட்டாது.**

- முன் வைப்புத்தொகையை சேலம், கட்டட (க&ப) கோட்டம், செயற்பொறியாளர் பெயரில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் எடுக்கப்பட்ட கேட்பு வரைவோலைகள் அல்லது செயற்பொறியாளரின் பெயருக்கு அடமானம், செய்யப்பட்ட சிறு சேமிப்பு பத்திரங்களான, தேசீய சேமிப்பு பத்திரம் மற்றும் கிஷான் விகாஸ் பத்திரம், ஆகியவைகள் முன்வைப்புத் தொகைகளாக ஏற்கப்படும். செயற்பொறியாளர் பெயருக்கு அடமானம் செய்யப்படாத தேசீய சேமிப்புப் பத்திரங்களோ அல்லது கிஷான் விகாஸ் பத்திரங்களோ இணைக்கப்பட்டு அளிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் இரத்து செய்யப்படும். வங்கியின் பொறுப்புறுதி ஒரு போதும் ஏற்கப்படமாட்டாது.

- ஒப்பந்தப்புள்ளி படிவம் கோரும் ஒப்பந்தக்காரர்கள், அவர்தம் விண்ணப்பத்துடன் நடப்பாண்டின் வருமானவரி நிலுவையின்மை சான்றிதழ், வருமானவரி கணக்கு தாக்கல் செய்த சரால் படிவம், சரக்கு மற்றும் சேவை வரி நிலுவையின்மைச் சான்றிதழ், முன் அனுபவச் சான்றிதழ், நடப்பு ஆண்டில் ஒப்பந்தக்காரரால் பதிவை புதுப்பித்த சான்றிதழ் போன்றவற்றின் நகல்களை அரசு பதிவு பெற்ற அலுவலர்களிடம் உண்மை என சான்றொப்பம் பெற்று இணைக்க வேண்டும். மேற்கண்ட ஆவணங்களை பரிசீலித்து தகுதியானவர்களுக்கு மட்டுமே ஒப்பந்தப்புள்ளி படிவம் அலுவலக வேலை நாட்களில் வழங்கப்படும்.

- ஒப்பந்தப்புள்ளி நாளன்று பெறப்பட்ட எல்லா ஒப்பந்தப்புள்ளிகளையோ அல்லது குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளிகளையோ தள்ளுபடி செய்வதற்கும் மற்றும் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை இரத்து செய்வதற்கும் செயற்பொறியாளர் முழு அதிகாரம் பெற்றவராவர்.

- ஒப்பந்தப்புள்ளி அட்டவணை பெறவும் அல்லது உறையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அளிக்கவும் நிர்ணயிக்கப்பட்ட கடைசிநாள், ஏதாவது ஒரு காரணத்தினால் அரசு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின், ஒப்பந்தப்புள்ளி அட்டவணை அதற்கு அடுத்த அலுவலக வேலை நாளில் அளிக்கப்படும். அதேபோல் உறையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளியையும் அடுத்த அலுவலக வேலை நாள் பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

- இப்பணிக்கான ஏதேனும் விளக்கம் தேவைப்படின் அலுவலக வேலைநாட்களில் அலுவலக நேரங்களில் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலக முகவரி செயற்பொறியாளர், பொ.ப.து., கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்ட அலுவலகம். சேலம்–7 அலுவலக தொலைபேசி எண்: 0427 2413116.

ஒம்/-

**செயற்பொறியாளர், பொ.ப.து.,**
**கட்டட (க&ப) கோட்டம், சேலம்–7**

பெறுநர்.

நகல் பட்டியல்படி எல்லா பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள்.
நகல் கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட (கர&ப) வட்டம், சேலம்–7. அவர்களின் மேலான பார்வைக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
நகல் இக்கோட்டத்தைச் சார்ந்த அனைத்து உதவி செயற்பொறியாளர்களுக்கும் விளம்பரம் செய்யும் பொருட்டு 5 நகல்கள்
நகல் நேர்முக உதவியாளர் (தொழில்நுட்பம்) / முதுநிலை வரைதொழில் அலுவலர் / கோட்ட கணக்கர் மற்றும் வரைவுப் பகுதி அலுவலர்கள்.
நகல் செயற்பொறியாளர், மேசைக்கு
நகல் விளம்பரப் பலகைக்கு

ஒம்/-

**செயற்பொறியாளர், பொ.ப.து.,**
**கட்டட (க&ப) கோட்டம், சேலம்–7**